# புனிதர் ஊலாவ் *(995-1030)*



ஊலாவ் சாதாரண உயரத்தைக்கொண்ட, பருமனான உடல்வாகைக்கொண்ட, மண்ணிற தலைமயிரைக் கொண்ட, அவள்ளைத்தோல் கொண்ட உருவத்தையுடையவராகவே Snorres kongesagaer வில் சித்தரிக்கப்படுகிறார். விசாலமான முகத்தையும் அழகான, நட்பான கண்களைக் கொண்டிருந்தபோதிலும், கோபம் வரும்போதில் முகம் பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாக இருந்ததாகவும் சித்திரிக்கப்படுகிறது. ஊலாவ் வில்வித்தையிலும் ஈட்டி எறிவதிலும் சிறந்தவர்.

புனிதர் ஊலாவின் உண்மையான பெயர் ஊலாவ் ஹரால்ட்ஸன். அவர் முதல் முறையாக வைகிங் ஆக சென்ற போது அவர் வயது பன்னிரண்டு மட்டுமே. அவர் விரைவாக, 15 வயதிற்கு முன்பாக ஒரு திறமையான போர்வீரர் என அறியப்பட்டார். மற்றும் அவர் வைங்கின் இராணுவத்தின் தலைவராக பிரான்ஸிலும் இங்கிலாந்திலும் பணியாற்றினார். பிரான்சில் தங்கியிருந்த சமயத்தில் அவர் கிறித்துவத்துடன் அறிமுகமானார். அவர் ரூவேன் கதீட்ரலில் ஞானஸ்நானம் பெற்றார்.

## நோர்வேயின் அரசனாக ஊலாவ்

அந்த காலகட்டத்தில் டென்மார்க் அரசனின் கட்டுப்பாட்டில் நோர்வே இருந்தது. ஊலாவ் நோர்வேயின் அரசனாக வரவிரும்பினார். ஆனால், பிரபுக்கள் இதை விரும்பவில்லை. பெரிய படைகளைத் திரட்டி ஊலாவை நாட்டைவிட்டுத் துரத்த முயன்றார்கள். கடல்யுத்தத்தின்மூலம் 1016ஆம் ஆண்டு பிரபுக்களைத் தோற்கடித்து, முழு நோர்வேயையும் கைப்பற்றினார்.

ஊலாவின் முழு நோக்கமும் நோர்வேயை கிறிஸ்தவ மதத்தை முற்றுமுழுதாகத் தழுவவைப்பதே. அவர் பல தேவாலயங்களைக் கட்டிய அதே வேளை, மற்றைய சமயங்களைச்சேர்ந்த கடவுள்களின் படங்களைக் கிழித்து எறிந்தார். புலரை கிறீஸ்தவ மதத்திற்கு மாற்றிய அதே நேரம், தாமாகவே சொந்த விருப்புடன் மதம்மாறாதவர்கள் கட்டாய மதமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். அவருக்கு எதிராக துணிந்து குரலெழுப்பியவர்களின் நாக்கு துண்டிக்கப்பட்டது அல்லது கண்கள் எரிக்கப்பட்டது. சிலர் உயிருடன் புதைக்கப்பட்டனர்.

## Olav må rømme fra landet

1028இல் டென்மார்க் அரசன் நோர்வேயை நோக்கி கப்புற்படையடன் படை எடுத்தான் நாட்டை மீண்டும் வெல்வதே அவன் நோக்கம். டென்மார்க் அரசனின் படை தனது படையைவிட

மிகவும் பலமானது என்பதை உணர்ந்த ஊலாவ் நாட்டைவிட்டு ரசிய நாட்டை நோக்கி நகர்ந்தார். அங்கே இரண்டு ஆண்டுகள் இருந் து ஒரு சிறிய படையைத் திரட்டிக்கொண்டு நோர்வே திரும்பினார்.

**Stiklestadஇல் நடந்த யுத்தம்**



யூலை 29ந்திகதி 1030அன்று ஊலாவின் படைStiklestadஇல் யுத்தத்துக்கு தயாராக இருந்தது. அவரிடம் 3600 வீரர்கள் மட்டுமே இருந்தார்கள். எதிரிகள் நான்கு மடங்கு பெரியது. யுத்தம் யுத்தம் பயங்கரமாக இருந்தது.

**OLSOK**

புனிதர் ஊலாவ் இறந்த யூலை 29ந்திகதி olsokdagen என்று இன்னமும் நிரனவுகூரப்படுகிறது.

ஊலாவின் படைகள் வீரத்துடன் போரிட்டார்கள், எனினும் இறுதியில் தோல்வியைச் சந்திக்க வேண்டியதாயிற்று. எதிரிப்படை வீரனொருவனின் கோடரி ஊலாவின் தொடையைத் தாக்கியது. வயிற்றிலே ஈட்டி ஏறியது. கழுத்திலே வாள்வெட்டு விழ ஊலாவின் உயிர் பிரிந்தது.

## ஊலாவ் புனிதனாக அறிவிக்கப்படல்

ஊலாவின் உடல் Nidaros என்று அழைக்கப்பட்ட Trondheimஇலுள்ள Nidelva மணற்பரப்பில் புதைக்கப்பட்டது. சிறிது நேரத்தினபின் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் அதிசயம் நிகழ்ந்ததாக பார்த்தவர்கள் கூறினார்கள். 12 மாதங்கள் 5 இரவுகளின் பின் ஊலாவின் புதைகுழி தோண்டப்பட்டது. புதைகுழியிலிருந்து சாதாரண மணத்திற்குப் பதிலாக ஒரு வாசனை எழும்பியது. அரசனின் வதனம்போல உயிருள்ளவரின் வதனம்போல் சிவப்பாக இருந்தது. உயிருடனிருப்பவர்க்கு வளர்வதுபோல் நகங்கள், தலைமயிர் நீண்டு வளர்ந்திருந்தன. பிஷப், புதிய அரசன், மக்கள் எல்லோரும் அரசன் ஊலாவை புனிதனாக நம்பினார்கள். Nidaros இலுள்ள Klemens தேவாலயத்தில் அவரின் உடல் புதைக்கப்பட்டு, அழகான கிரீடம் அமைக்கப்பட்டது. இவ்வாறு அரசன் ஊலாவ் புனிதர் ஊலாவாக மாறினார். தொடர்ந்து நோர்வேயிலிருந்து மட்டுமல்லாது ஐரோப்பாவின் பல நாடுகளிலுமிருந்து அவரது புதைகுழியைத் தரிசிக்க மக்கள் தொடர்து வந்தனர்.



Bilde: Wikipedia

Nidarosdomen i Nidaros (Trondheim) ble oppført på det sted hvor Olav den helliges lik ble gravd ned etter slaget på Stiklestad. Etter hvert ble liket til Olav flyttet fra Klemenskirken til Nidarosdomen.

**Kilder**:

Midgard 6, samfunnsfag

Gaia 6, samfunnsfag

Nysgjerrigper

Store norske leksikon